வகுப்பு : 6-ம் வகுப்பு

பாடம் : தமிழ்

வாழ்வியல்
திருக்குறள்

II. குறுவினா.

1. அறிவின் பயன் யாது?

பிற உயிரின் துன்பத்தைத் தமது துன்பம் போல் எண்ண வேண்டும். அவ்வாறு நினைப்பதோடு, அத்துன்பத்திலிருந்து காப்பாற்றவும் வேண்டும். அதுவே நாம் பெற்ற அறிவின் பயன் ஆகும்.

2. பிற உயிர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும்?

தம்மிடம் இருப்பவற்றைப் பிற உயிர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துக் காப்பாற்ற வேண்டும்.

3. ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?

- இல்லாதவர்க்குத் தருவதே ஈகை ஆகும்.
- மற்றவை எல்லாம் பயனை எதிர்பார்த்துச் செய்பவை ஆகும்.
- இல்லாதவர்க்குத் தருவதால் இன்பம் உண்டாகும்
- அதனை அறியாதவர்கள் பொருளைச் சேர்த்து வைத்துப் பின் அதனை இழந்து விடுவார்கள்.

இயல் – 9
ஆசியஜோதி

I. குறுவினா.

1. அரசனாலும் செய்ய முடியாத செயல் எது?

வாழ்கின்ற உயிர்களை அழிப்பது இந்த உலகத்தில் எல்லார்க்கும் எளிய செயல். ஆனால், இறந்த உடலுக்கு உயிர்கொடுத்து எழுப்புவது அரசனாலும் முடியாத செயல் ஆகும்.

2. **எறும்பு எதற்காகப் பாடுபடுகிறது?**

எறும்பு தன் உயிரற்க் காத்துக் கொள்ளப் பாடுபடுகிறது.

3. ஒரு நாளும் விட்டுச் செல்லாதது எது?

ஒருவர் செய்த நன்மையும், தீமையும் ஒரு நாளும் அவரை விட்டுச் செல்லாது.

4. உலகம் முழுமையையும் எப்போது ஆள முடியும்?

நல்ல மனம் கொண்டிருப்பவரால் மட்டுமே பரந்த இவ்வுலகம் முழுமையையும் இரக்கத்தால் ஆட்சி செய்ய முடியும்.

II. சிறுவினா.

1. எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழப் புத்தர்பிரான் கூறும் அறிவுரைகள் யாவை?

- ஒருவர் செய்த நன்மையும், தீமையும் ஒரு நாளும் அவரை விட்டுச் செல்லா. ஆகையால் தீய செயல்களைச் செய்யாதீர்கள்.
- இந்தப் பூமியை மகிழ்ச்சியற்றதாக மாற்றிடும் எண்ணத்தை உங்களை விட்டு நீக்குங்கள்.
- மக்களோடு சேர்ந்து மற்ற உயிர்களும் மகிழ்வோடு வாழப் புத்தர்பிரான் அறிவுரைகள் கூறினார்.

III. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி

நின்றவர் கண்டு நடுங்கினாரே–ஐயன்
நேரில் நிற்கவும் அஞ்சினாரே ;
துன்று கருணை நிறைந்த வள்ளல் - அங்கு
சொன்ன மொழிகளை கேளும் ஐயா!
வாழும் உயிரை வாங்கிவிடல்இந்த –

மண்ணில் அவர்க்கும் எளிதாகும்!
வீழும் உடலை எழுப்புதலோ ஒரு –
வேந்தன் நினைக்கிலும் -ஆகாதையா!

வினாக்கள்.

1. இப்பாடலை எழுதியவர் யார்?

அ. திருமூலர் **ஆ. கவிமணி** இ. திரு.வி.க

2. இப்பாடல் இடம் பெற்ற நூல்?

அ. ஆசியஜோதி ஆ. பராபரக்கண்ணி இ. தீர்க்கதரசி

3. கருணை என்பது பொருள்

அ. மழை **ஆ. இரக்கம்** இ. பூமி

Created by Pinkz

4. எளிதாகும் சொல்லை பிரித்து எழுதுக.

அ. எளிது + தாகும் ஆ. எளி + தாகும் **இ. எளிது + ஆகும்**

5. வேந்தன் என்பதன் பொருள்

அ. கருணை **ஆ. அரசன்** இ. பண்பு

உரைநடை

மனிதநேயம்

I. குறுவினா.

1. யாரால் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது?

மனித நேயத்துடன் வாழ்பவர்களால்தாம் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

2. வள்ளலார் பசிப்பிணியை நீக்க என்ன செய்தார்?

வள்ளலார் தம் பெருமுயற்சியால் வடலூரில் சத்திய தருமச்சாலையைத் தொடங்கி எல்லோருக்கும் உணவளித்தார்.

3. அன்னை தெரசா கண்ணீர்விடக் காரணம் யாது?

தொழுநோயின் கடுமையால் பாதிக்கப்பட்ட மூதாட்டி ஒருவர் சாலையின் ஓரம் படுத்திருந்தார். அவர் அருகில் சென்று அவரைத் தொட்டுத் தூக்கினார்.

“ என்னைத் தொடாதீர்கள், என் நோய் உங்களுக்கும் தொற்றிக் கொள்ளும். என் உறவினர்களே என்னை வெறுத்து ஒதுக்கிவிட்டனர். இந்தப் பூனை மட்டுமே என்னுடன் இருக்கிறது என அழுதார் மூதாட்டி.

இதைக் கேட்ட அன்னை தெரசா கண்ணீர் விட்டார்.

II. சிறுவினா.

1. கைலாஷ் சத்யார்த்தி நோபல் பரிசு பெறத் தூண்டுகோலாய் அமைந்த இளமைக்கால நிகழ்வு யாது?

கைலாஷ் சத்யார்த்தி சிறுவயதில் தினமும் பள்ளிக்கூடம் செல்லும்பொழுது சாலையோரத்தில் சிறுவன் ஒருவனைக் காண்பார். அவன் தன் தந்தையுடன் அமர்ந்து வேலை செய்து கொண்டு இருப்பான். ஏன் அந்தச் சிறுவன் தன்னைப்போல் பள்ளிக்கு வரவில்லை என்ற வினா அவர் உள்ளத்தில் உறுத்திக்கொண்டே இருந்தது. தன் ஆசிரியரிடமும் பெற்றோரிடமும் இவ்வினாவினைக் கேட்டார். “ பணம் இல்லாததால் அச்சிறுவன் பள்ளிக்கு

வரவில்லை. வீட்டின் உணவுத் தேவையை நிறைவு செய்யப் பணம் வேண்டும். எனவே அவன் பணம் ஈட்ட வேலை பார்க்கிறான் என்ற பதில் கிடைத்தது. அந்தப் பதில் அவருக்கு மிகுந்த மன வருத்தத்தைக் கொடுத்தது. அதுவே பின்னாளில் அவர் நோபல் பரிசு பெறத் தூண்டுகோலாக அமைந்த நிகழ்வு ஆகும்.

துணைப்பாடம்
முடிவில் ஒரு தொடக்கம்

I. சிறுவினா

1. "முடிவில் ஒரு தொடக்கம்" என்ற தலைப்பின் காரணம் குறித்துக் கூறுக.

ஹிதேந்திரன் தன் வீட்டிற்க்குச் செல்ல நேரமாகிவிட்டது என்னும் பதற்றத்தில் தன் வாகனத்தில் ஏறி விரைந்து ஓட்டினான். அதனால் முன்னால் சென்று கொண்டிருந்த சரக்குந்தில் வெளியே நீட்டிக் கொண்டிருந்த கம்பிகள் அவன் மீது மோதி அவனைத் தடுமாறிக் கீழே விழச் செய்தன. அவன் தலைக்கவசம் அணியாதிருந்தால், விழுந்த வேகத்தில் அவன் தலை தரையில் மோதியது. அதனால் அவன் மூளை செயல் இழந்து விட்டது. ஆனால், அவன் இதயம் மட்டும் இயங்கிக் கொண்டிருந்தது.

மூளை செயலற்ற நிலையில் ஹிதேந்திரன் வாழ்வு முடிவுற்றாலும் இயங்கிக் கொண்டிருந்த அவன் இதயம், இதயப் பாதிப்பால் இறக்கும் நிலையினை எட்டிக் கொண்டிருந்த சிறுமி ஒருத்திக்குப் பயன்பட்டுப் புதிய அவள் வாழ்வுக்கு நல்ல தொடக்கமாய் அமைந்தது. இந்நிகழ்வு ஏற்ற இன்னொரு பொருத்தமான தலைப்பு "இதயங்களை வென்றவன். என்ற தலைப்பு பொருந்தும்.

2. இக்கதைக்குப் பொருத்தமான மற்றொரு தலைப்பு இடுக.

இக்கதைக்குப் பொருத்தமான மற்றொரு தலைப்பு "இதயங்களை வென்றவன்.

இலக்கணம்
அணி இலக்கணம்

I. குறுவினா.

1. உள்ளதை உள்ளவாறு கூறும் அணியின் பெயர் யாது?

உள்ளதை உள்ளவாறு கூறும் அணியின் பெயர் இயல்பு நவிற்சி அணியாகும்.

2. உயர்வு நவிற்சி அணி என்பது யாது?

ஒரு பொருளின் இயல்பை மிகைப்படுத்தி அழகுடன் கூறுவது உயர்வு நவிற்சி அணி ஆகும்.